# 7 திருமுறைத் தொகுப்பு

திருநாரையூரில் ஆதிசைவ அந்தணர் மரபில் நம்பியாண்டார் நம்பி அவதரித்தார். நம்பியின் தந்தையார் திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையாருக்குப் பூசை செய்து வந்தார். ஒரு நாள் நம்பியின் தந்தை வெளியூர் சென்றமையால் பூசை செய்யும் பொறுப்பை நம்பியிடம் விட்டுச்சென்றார். நம்பி தாயார் கொடுத்த நிவேதனப்பொருட்களை எடுத்துச்சென்று பிள்ளையாருக்குப் படைத்து பூசை செய்து அதனைத் திருவமுது செய்யுமாறு வேண்டினார். பிள்ளையார் திருவமுது செய்யாதிருப்பதைக் கண்டு நம்பியும் மிகவும் மனம் வருந்தி பிள்ளையார் முன் நின்று ‘‘சுவாமி அடியேன் ஏதும் பிழை செய்தேனோ! அடியேன் படைத்த அமுதைத் திருவமுது செய்யாதது ஏன்?’’ என்றார். நைவேத்தியம் அப்படியே இருந்தது. நம்பி மிகவும் மனம் வருந்திக் கல்லில் தன் தலையினை மோதப்புகுந்தார். அப்பொழுது பொல்லாப்பிள்ளையார், ‘‘நம்பி! பொறு! பொறு!’’ எனத்தடுத்து நைவேத்தியத்தை உவந்து திருவமுது செய்தருளினார். இதனால் நம்பி பெரும் மகிழ்ச்சி அடைந்தார்.



இவ்வாறு சில தினங்கள் நிகழ்ந்து வந்தன. இச்செய்தியை யாவரும் அறிந்து வியப்படைந்தனர். இந்த அற்புத நிகழ்வானது திருநாரையூரைச் சுற்றியுள்ள ஊர்களுக்கெல்லாம் பரவி, பின்னர் தஞ்சைப்பகுதிக்கும் எட்டியது. அப்போது தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்து வந்த மன்னன் முதலாம் இராஜராஜசோழன் ஆவான். இவன் சைவசமயத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவன். அவனுக்குத் தேவாரப்பாடல்கள் முழுவதையும் கேட்டு மகிழ ஆசை. இவ்வேளையில் திருநாரையூரில்

நம்பி படைத்த உணவை பொல்லாப்பிள்ளையார் தினமும் உண்டு வருகின்றார் என்ற செய்தியைக் கேட்ட சோழமன்னன் தனது ஆசையை எப்படியாவது நிறைவேற்ற வேண்டும் என எண்ணி , தன் பரிவாரங்கள் சூழ, மோதகம், அப்பம், வடை, கடலை, பழ வகைகள், தேன் என்பவற்றை யானை மீது ஏற்றிக்கொண்டு திருநாரையூர் வந்தடைந்தார். வந்தடைந்த அரசன், நம்பியின் பாதங்களை வணங்கிப் பொல்லாப்பிள்ளையாருக்கு



பொல்லாப் பிள்ளையாரை நம்பியும் அரசனும் வழிபடல்

நிவேதிக்கும்படி கொண்டு வந்த பொருட்களை அவன் நம்பியின் கையில் கொடுத்தான். நம்பியும் பிள்ளையார் திருவடியை வணங்கி, நைவேத்தியத்தைப்படைத்து, ''எம்பெருமானே! அரசர் நிவேதித்த இப்பொருட்களை திருவமுது செய்தருளுக'' என்று பிரார்த்தித்தார். ஆனைமுகக் கடவுளும் அவற்றைத் தமது துதிக்கையினால் ஏற்றுத் திருவமுது செய்தருளினார். இதைக் கண்டு மனம் மகிழ்ந்த மன்னன் நம்பியின் பாதங்களில் விழுந்து வணங்கி, நம்பியை நோக்கி, ''மறையவரே! மூவர் தமிழும், அவர் (செய்தியும்) உலகில் விளங்கச் செய்தருளுக.'' என்று விண்ணப்பித்தான். நம்பியும் பிள்ளையாரின் திருவடிகளைத் தியானித்து வணங்கி, அரசனின் விருப்பத்தை நிறைவேற்றித்தருமாறு வேண்டி நின்றார். அப்போது பிள்ளையார்,''நம்பி! தேவாரத்திரு முறைகள் சிதம்பரத்தில் ஓர் அறையில் உள்ளன.'' என்று திருவாய் மலர்ந்தருளினார். அதனை நம்பி சோழமன்னனுக்குக் கூறினார்.



மூவரது செப்பு திருமேனிகள் தில்லைக்கு எழுந்தருளல்

அதன்படி நம்பி தஞ்சை மன்னனை அழைத்துக் கொண்டு தில்லைக்குச்

சென்றார். தில்லையில் பிள்ளையார் உணர்த்திய வாறு திருக்காப்பிடப் பட்டிருந்த அறையைத் திறக்கும்படி தில்லைவாழ் அந்தணர்களை மன்னன் கேட்டுக்கொண்டான்.''இந்த அறையில் தான் மூவர் பாடிய தேவாரப்பதிகங்கள் உள்ளன. ஆனால் அம்மூவரும் வந்தால் தான் அறை திறக்கப்படும்'' என்று அந்தணர் கூறினர். உடனேமன்னன்மூவர்முதலிகளைப்போலச் செப்புதிருமேனிகளைச் செய்வித்து அவைகளைத் தனித்தனியே பல்லக்கில் ஏற்றி, இதோ மூவரும் வந்துவிட்டனர். திருமுறைகள்இருக்கின்றஅறைக்கதவினைத் திறமின்'' எனத் தில்லைவாழ் அந்தணரைக் கேட்டுக் கொண்டான். அவர்களும் அறைக் கதவினைத் திறந்தனர். அவ்வறையில் தேவாரப்பதிகங்கள் எழுதிய ஓலைச் சுவடிகளில் பலவற்றைக் கறையான் அரித்திருப்பதைக் கண்ட நம்பி மனம் வருந்தினார். அப்போது ''இக்காலத்திற்கு வேண்டாதவையே அழித்துள்ளன. எனவே கவலையொழிக! '' எனும் ஓர் அசர வாக்கு ஒலித்தது. இதனால் மகிழ்ச்சியடைந்த நம்பி பழுதுபடாதிருந்த ஏடு களைத் திரட்டி இராஜராஜசோழ மன்னனின் வேண்டுதலுக்கிணங்க திருமுறைகளாகத் தொகுத்தார்.



தில்லையில் தேவார ஏடுகள் கறையான் அரித்திருத்தலை காணுதல்

திருஞானசம்பந்தருடைய பாடல்களை முதல் மூன்று திருமுறைகளாகவும், திருநாவுக்கரசரது பாடல்களை நான்காம், ஐந்தாம், ஆறாம் திமுறைகளாகவும், சுந்தரமூர்த்தி நாயனாருடைய பாடல்களை ஏழாந்திரு முறையாகவும் தொகுத்தார்.



திருமுறைகளை தொகுத்தல்

மாணிக்கவாசக சுவாமிகள் பாடிய திருவாசகம், திருக்கோவையார் எட்டாந் திருமுறையாகவும், திருமாளிகைத் தேவர் முதலிய ஒன்பது பேர் பாடிய திருவிசைப்பா மற்றும் சேந்தனார் பாடிய திருப்பல்லாண்டு, ஒன்பதாம் திருமுறையாகவும்,

திருமூல நாயனாரால் பாடி அருள் பெற்ற திருமந்திரம் பத்தாம் திருமுறையாகவும், பன்னிருவர் பாடிய பிரபந்தங்கள் பதினொராம் திருமுறையாகவும் நம்பியாண்டார் நம்பியால் தொகுக்கப்பட்டன. பன்னிரெண்டாம் திருமுறையாக சேக்கிழார் அருளிய திருத்தொண்டர் புராணம் இடம்பெறுகிறது.

## பயிற்சிகள்

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. நம்பி அவதரித்த ஊரின் பெயர் என்ன?
2. நம்பி மனம் வருந்தி தமது தலையினைக் கல்லிலே மோதச் சென்றமைக்கான காரணம் யாது?
3. தேவாரப்பாடல்கள் எந்த ஆலயத்தில் இருந்தன?

## செயற்பாடு

★ பன்னிருதிருமுறைகளை அட்டவணைப்படுத்துக.

## பாடச்சுருக்கம்

1. நம்பியாண்டார் நம்பி திருநாரையூரில் அவதரித்தார்.
2. நம்பியின் பக்தி சிறப்பானது.
3. தேவாரப்பாடல்கள் சிதம்பரத்தில் ஓர் அறையில் கண்டெடுக்கப்பட்டன.